# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 369/2022**

பெயர் : விஜயராகவன் (PW1)

த/க/பெ. :

தேதி : 26.03.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி என்தந்தை என்றால் சரிதான். என்னுடைய வழக்குரைமற்றும் பிரமாண வாக்குமூலத்தில் மூதாதயைர் சொத்து என்றாலும் அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் முத்தையாபிள்ளை பெயரில் உள்ள அடங்கலை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் குறியீடு செயயப்படவில்லைஎன்றாலும் வழக்கிற்காகவும் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் ஆவணம் நீதிமன்றத்தில் குறியீடு செயய்ப்படவில்லை என்பதால் அந்த ஆவணத்தின்அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தா முத்தையா அரியலூர்மாவட்டத்தில் பிறந்தார் என்றால் கார்குடியில் வாழ்ந்துவந்தார் என்றால் சரிதான். கார்குடியிலும் வாழ்ந்து வந்தார. முத்தையாபிள்ளைக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்பதை வழக்குரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து எந்த காலத்திலும் முத்தையாபிள்ளை பெயரில் இல்லாததால்தான் அது குறித்து ஆவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான்குறிப்பிடும் அடங்கல் போலியாக பெறப்பட்டதால்நீதிமன்றத்தில் குறியீடு செயய்ப்படவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து தெற்கே என்னுடைய வீடு அமைந்துள்ளது. தாவாச்சொத்தில் 40, 50 ஆண்டுகாலம் நாங்கள் யாரும் குடியிருக்கவில்லை என்றால் என்னுடைய தந்தை குடியிருந்து வந்தார். 31,07.1997 என்னுடைய தந்தையின் சகோதரர் பட்டுசாமி பெயரில் பட்டா வழங்கபட்டுள்ளது என்றால் அது குறித்து தெரியாது. பட்டாபெற்று பட்டுசாமி அந்த வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் அந்த இடத்தில் என் தந்தை குடியிருந்து வந்தார். பட்டுசாமியின் மனைவி மல்லிகா புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிடடார் என்றால் சரிதான். 10.11.2008 மல்லிகாவின் சிகிச்சைக்காக தாவாச்சொத்தை 5ம்பிரதிவாதியுடன் கிரையம் ஒப்பந்தம்செய்த விவரம் என்தந்தைக்கு தெரியும் என்றால் சரியல்ல. 14.09.2009 ல் பட்டுசாமி5ம்பிரதிவாதியின் பெயரில் தாவாச்சொத்தை குறித்து ஆவண எண்.2310/2009 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் தெரியாது. 5ம் பிரதிவாதி கிரையம் பெற்றது தெரிந்த பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கில் எந்த

பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 5ம்பிரதிவாதி கிரையம்பெற்று 12 ஆண்டுகளுக்கு பிறகு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காலவரைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் 12 ஆண்டுகளுக்குள்ளாகவே வழக்கு போட்டுவிட்டோம். நாங்கள் குடியிருந்துவரும் இடம் ஒலையாம்புத்தூர்வருவாய்கிராமம் சர்வே எண்.201 ஆகிய சொத்துக்கள் குறித்து என் தந்தைக்கும் அவரது சகோதரர்களுக்கிடைய பாகம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1,4 பிரதிவாதிகளிடம் 2020ல் பாகம் கோரியதாக வழக்குமூலம் குறிப்பிட்டுள்ளோம் என்றாலும் அது கொரோனா தொற்றுகாலம் என்பதால் வழக்குமூலம்பொய்யானது என்றாலும் அவ்வாறு பிரதிவாதிகளை நாங்கள் கேட்டு இருந்தால் 1,4 பிரதிவாதிகளிடம்பாகம் கேட்டிருந்ததால் தேதியை குறிப்பிட்டு இருப்போம் என்றால் சரியல்ல. முதல்பிரதிவாதிக்கும் என்சித்தப்பாவிற்கும் திருணம் ஆகி குழந்தைகள் இருக்கிறது என்றால்வழக்கிற்கு பின்னிட்டுதான்குழந்தைகள் இருக்கிறது. வழக்கிற்கு முன்பே குழந்தைகள் பிறந்துவிட்டது என்றாலும் அவசிய தரப்பினர்கள் ஆன அவர்களை சேர்க்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. 5ம்பிரதிவாதி சொத்து கிடைத்துபிறகு அவர்களுடைய பிள்ளைகளுக்கு பாகம்கொடுததுவிட்டார் என்றால் சரியல்ல. 5ம்பிரதிவாதி தாவாச்சொதது பொறுத்து அவர் மகன்மீது செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார்என்றால் அந்த விவரம் தெரியாது. வழக்குரை சொத்து விவரத்தில் ஓலைபுத்தூர் கிராமம் மேலத்தெருவில் சொத்து அமைந்துள்ளது. தாவாச்சொத்து எந்த நான்கெல்லைகளை என்று சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்து ஓலையாம்புத்தூர் மேலத்தெருவில் அமைந்துள்ளது என்றாலும் அதன்நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றாலும் வழக்கில் எந்த பரிகாரரமும் கிடைகக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என்தந்தை உடல்நிலைய சரியில்லாததால் மருத்துவ சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தூண்டுதலால் என்தந்தை வழக்கு போட்டுள்ளார் என்றாலும் 5ம்பிரதிவாதிக்கு விற்பனை செய்த விவரம்தெரிந்துக்கொண்டு சாட்சியம்அளிக்க வரவில்லை என்றாலும் சரியல்ல.